No. of Printed Pages : **11**

**8347**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III

# பொருளியல் / ECONOMICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

Visit CollegeDekho

1. MPC = 0.5 எனில் பெருக்கியின் மதிப்பு :

(அ) 0.2 (ஆ) 2 (இ) 20 (ஈ) 1/2

If the MPC is 0.5, the value of multiplier is __________.

(a) 0.2 (b) 2 (c) 20 (d) 1/2

2. கேள்வித்தாள் மூலம் புள்ளி விவரம் திரட்டப்பட்டால் அது __________.

(அ) வெளியிடப்பெற்ற விவரம் (ஆ) முதல்நிலை விவரம்

(இ) தொகுக்கப்பட்ட விவரம் (ஈ) இரண்டாம்நிலை விவரம்

The data collected by questionnaires are __________.

(a) Published data (b) Primary data

(c) Grouped data (d) Secondary data

3. கீழ்வருவனவற்றுள் எது நேர்முக வரி ?

(அ) வருமான வரி (ஆ) கலால் வரி

(இ) சேவை வரி (ஈ) சுங்க வரி

Which of the following is a direct tax ?

(a) Income tax (b) Excise duty

(c) Service tax (d) Customs duty

4. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது ஏற்படுவது :

(அ) பணவாட்டம் (ஆ) தாவும் பணவீக்கம்

(இ) மிதமான பணவீக்கம் (ஈ) உயர் பணவீக்கம்

When the prices rise slowly, we call it as :

(a) deflation (b) galloping inflation

(c) mild inflation (d) hyper inflation



Visit CollegeDekho

5. ஜே.எம். கீன்ஸ் பொருளாதாரத்திற்கு அளித்த பங்களிப்பை குறிப்பிடுக.

(அ) மூலதனம் (ஆ) நாடுகளின் செல்வம்

(இ) பொது நிதி (ஈ) பொதுக் கோட்பாடு

Indicate the contribution of J.M. Keynes to Economics :

(a) Capital (b) Wealth of Nations

(c) Public Finance (d) General Theory

6. ''சுற்றுச்சூழல் செயல்பாடுகளின் பாதுகாப்பு விதி'' ஏற்படுத்தப்பட்ட ஆண்டு ________.

(அ) 1999 (ஆ) 1997 (இ) 1996 (ஈ) 1998

"Protection of the Environment Operations Act" was set up in ________.

(a) 1999 (b) 1997 (c) 1996 (d) 1998

7. நிதி ஆயோக்கின் (NITI Aayog) ஆங்கில விரிவாக்கம் ?

(அ) National Institution to Transform India

(ஆ) National Institute of Transport India

(இ) National Institution for Transforming India

(ஈ) National Institute for Trade in India

Expansion of NITI Aayog :

(a) National Institution to Transform India

(b) National Institute of Transport India

(c) National Institution for Transforming India

(d) National Institute for Trade in India

8. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது ?

(அ) ஒப்புமைச் செலவு (ஆ) முழுமைச் செலவு

(இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

Which of the following is a Modern theory of International Trade ?

(a) Comparative cost (b) Absolute cost

(c) Factor Endowment theory (d) None of these



Visit CollegeDekho

9. பெருக்கியின் மதிப்பு __________.

(அ) 1/(1 – MPC) (ஆ) 1/MPS (இ) 1/MPC (ஈ) (அ) மற்றும் (ஆ)

The value of multiplier is __________.

(a) 1/(1 – MPC) (b) 1/MPS (c) 1/MPC (d) Both (a) and (b)

10. கார நிலம் அதிகமாக __________ சமவெளியில் காணப்படும்.

(அ) வடஇந்திய (ஆ) கங்கை

(இ) சிந்து - கங்கை (ஈ) மேற்கூறிய அனைத்தும்

Alkali Soils are predominantly located in the __________ plains.

(a) North-Indian (b) Gangetic

(c) Indus-Ganga (d) All the above

11. ''மேக்ரோ'' (Macro) என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் யார் ?

(அ) ஜே.எம். கீன்சு (ஆ) ராக்னர் பிரிக்சு

(இ) காரல் மார்க்சு (ஈ) ஆடம் ஸ்மித்

Who coined the word 'Macro' ?

(a) J.M. Keynes (b) Ragnar Frisch

(c) Karl Marx (d) Adam Smith

12. கீழ்காணும் எந்தத் திட்டம், வேளாண்மையையும் கிராமப் பொருளாதாரத்தையும் மையமாகக் கொண்டது ?

(அ) காந்தியத் திட்டம் (ஆ) மக்கள் திட்டம்

(இ) விஸ்வேசுவரய்யா திட்டம் (ஈ) பாம்பே திட்டம்

Which of the following plan has focused on the agriculture and rural economy ?

(a) Gandhian plan (b) People's plan

(c) Vishveshwarayya plan (d) Bombay plan



Visit CollegeDekho

**13.** முதன்மைப் பற்றாக்குறை = __________.

(அ) மொத்த செலவு – மொத்த வரவு

(ஆ) நிதிப்பற்றாக்குறை – வட்டி செலுத்துதல்

(இ) மொத்த வருவாய் செலவினம் – மொத்த வருவாய் வரவுகள்

(ஈ) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை – அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புகளும்

Primary Deficit (PD) = __________.

(a) Total Expenditure – Total Revenue

(b) Fiscal Deficit – Interest Payment

(c) Total Revenue Expenditure – Total Revenue Receipts

(d) Budget Deficit – Government Market borrowings and liabilities

**14.** 2016 -இல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது ?

(அ) ₹ 500 மற்றும் ₹ 1000 (ஆ) ₹ 200 மற்றும் ₹ 500

(இ) ₹ 1000 மற்றும் ₹ 2000 (ஈ) (அ) மற்றும் (ஆ)

2016 Demonetization of currency includes denominations of :

(a) ₹ 500 and ₹ 1000 (b) ₹ 200 and ₹ 500

(c) ₹ 1000 and ₹ 2000 (d) Both (a) and (b)

**15.** வேலைவாய்ப்பு பற்றி தொன்மைக் கோட்பாட்டின் மையக் கருத்து என்பது __________.

(அ) குறைந்து செல் விளைவு விதி (ஆ) அங்காடி விதி

(இ) தேவை விதி (ஈ) நுகர்வு விதி

The core of the classical theory of employment is __________.

(a) Law of Diminishing Returns (b) Law of Markets

(c) Law of Demand (d) Law of Consumption

**16.** பன்னாட்டுப் பண நிதியம் __________ மாநாட்டில் உருவாக்கப்பட்டது.

(அ) பிரிட்டன் வுட்ஸ் (ஆ) பான்டுங்

(இ) சிங்கப்பூர் (ஈ) தோஹா

International Monetary Fund was an outcome of __________.

(a) Bretton Woods Conference (b) Pandung Conference

(c) Singapore Conference (d) Doha Conference



Visit CollegeDekho

**17.** முதன்மை துறை என்பது __________.

(அ) கட்டடம் கட்டுதல் (ஆ) வணிகம்

(இ) தொழில் (ஈ) வேளாண்மை

Primary sector is __________.

(a) Construction (b) Trade

(c) Industry (d) Agriculture

**18.** அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக் கூறுகள் கீழ்க்காண்பவற்றில் எவை ?

(அ) மைய வங்கி தீர்வு கணக்கு (ஆ) மூலதனக் கணக்கு

(இ) நடப்பு கணக்கு (ஈ) மேற்கூறிய அனைத்தும்

Components of Balance of Payments of a country include the :

(a) Official Settlement account (b) Capital account

(c) Current account (d) All of the above

**19.** சார்க் உச்சி மாநாடு __________ ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது.

(அ) 2 (ஆ) 5 (இ) 3 (ஈ) 4

SAARC meets once in __________ years.

(a) 2 (b) 5 (c) 3 (d) 4

**20.** நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?

(அ) ஜூலை 1982 (ஆ) ஜூலை 1992

(இ) ஜூலை 1962 (ஈ) ஜூலை 1972

NABARD was started in __________.

(a) July 1982 (b) July 1992

(c) July 1962 (d) July 1972



Visit CollegeDekho

## பகுதி - II / PART - II

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 - க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **Compulsory**.

**21.** பணவீக்கம் எனும் பதத்தினை வரையறுக்கவும்.

Define the term 'Inflation'.

**22.** நாட்டு வருமானத்தை வரையறுக்கவும்.

Define National Income.

**23.** தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக.

Give reasons for Labour retrenchment at present situation.

**24.** "நுகர்வு நாட்டம்" என்றால் என்ன ?

What is meant by "Propensity to Consume" ?

**25.** இறுதி நிலை சேமிப்பு நாட்டம் (MPS) - வரையறுக்கவும்.

Define Marginal Propensity to Save (MPS).

**26.** பணவாட்டம் என்றால் என்ன ?

What is Deflation ?

**27.** கடன் உருவாக்கம் என்றால் என்ன ?

What is Credit Creation ?

**28.** வணிக வீதத்தினை வரையறுக்கவும்.

Define Terms of Trade.



Visit CollegeDekho

29. எங்கு, எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது ?
When and where was SAARC Secretariat established ?

30. தேசிய மாதிரி கூறெடுத்தல் அலுவலகம் (NSSO) பற்றி எழுதுக.
Write about National Sample Survey Office (NSSO).

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **Compulsory**.

31. பொருளாதார முறைகளின் வகைகளை குறிப்பிடுக.
Describe the types of Economic systems.

32. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.
Write a short note on Per Capita Income.

33. கீழ்காண்பனவற்றிற்கு சுருக்கமான விடையை எழுதுக.
(i) பருவகால வேலையின்மை
(ii) உடன்பாடில்லா வேலையின்மை
(iii) கற்றோர் வேலையின்மை
Give short answer to the following.
(i) Seasonal Unemployment
(ii) Frictional Unemployment
(iii) Educated Unemployment

34. முடுக்கிக்கும், பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
Mention the differences between Accelerator and Multiplier effect.

35. தேவை இழுப்புப் பணவீக்கம், செலவு உந்து பணவீக்கம் ஆகியவற்றை விளக்குக.
Explain Demand-Pull and Cost Push Inflation.

**A**

Visit CollegeDekho

**36.** செயல்படாத சொத்து பற்றி விவரிக்கவும்.

Describe about Non-Performing Asset.

**37.** தற்கால அரசின் பணிகள் யாவை ?

What are the functions of Modern State ?

**38.** பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினைக் காண்.

14, 22, 9, 15, 20, 17, 12, 11.

Find the Standard Deviation of the following data :

14, 22, 9, 15, 20, 17, 12, 11.

**39.** காற்று மாசுபடுதலின் பல்வேறு வகைகளை விளக்குக.

Explain the different types of air pollution.

**40.** புள்ளியியலின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

Mention any three Limitations of Statistics.

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.

**அல்லது**

(ஆ) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி.

(a) Illustrate the functioning of an economy based on its activities.

**OR**

(b) Describe different types of Planning.



Visit CollegeDekho

**42.** (அ) நாட்டு வருமானம் கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள் யாவை ?

**அல்லது**

(ஆ) தொன்மைக் கோட்பாடு, கீன்சு கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(a) What are the difficulties involved in the measurement of National Income ?

**OR**

(b) Explain the differences between Classical theory and Keyne's theory.

**43.** (அ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை ?

**அல்லது**

(ஆ) இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

(a) What are the differences between Marginal Efficiency of Capital (MEC) and Marginal Efficiency of Investment (MEI) ?

**OR**

(b) Illustrate Irving Fisher's Quantity theory of Money.

**44.** (அ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை ? விளக்குக.

**அல்லது**

(ஆ) புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்.

(a) What are the objectives of Monetary Policy ? Explain.

**OR**

(b) Discuss the Modern Theory of International Trade.

**45.** (அ) குறிப்பு எழுதுக : (i) சார்க் (ii) ப்ரிக்ஸ்

**அல்லது**

(ஆ) அரசுச் செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை ?

(a) Write a note on : (i) SAARC (ii) BRICS

**OR**

(b) What are the reasons for the recent growth in Public Expenditure ?

**A**

Visit CollegeDekho

**46.** (அ) வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பலவகைப் பற்றாக்குறைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைபாடுகளையும் விளக்குக.

(a) Describe the various types of deficit in budget.

**OR**

(b) Explain the concepts of externality and its classification.

**47.** (அ) பொருளாதார அளவையியலின் நோக்கங்கள் யாவை ?

**அல்லது**

(ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடந்தொடர்புக் கெழுவினைக் கண்டறிக.

| **தேவை X :** | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **விற்பனை Y :** | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

(a) What are the objectives of Econometrics ?

**OR**

(b) Calculate the Karl Pearson's Correlation Co-efficient for the following data.

| **Demand of Product X :** | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Sale of Product Y :** | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

**- o O o -**



Visit CollegeDekho